# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :25 January 2025

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr.Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் ”வேட்கைப் பத்து” வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னா ˙களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

நன்றி

# அகத்தினுள்


இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்
முனைவர் சா.இன்குலாப்

தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு
S.Priyadharshini

விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை
முனைவர் கு.புஷ்பாவதி

அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.
திரு.கு.ரவிச்சந்திரன்

பாரதிதாசனின் பெண்ணுலகம்
கா. கவிதா

பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்
நா.ரஹமத் நிஷா

“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை
மு. வசந்தி

நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி
நா.சௌந்தர்யா

Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**Lakśana and Lakśya in Music**
**Srivaramangai Sadagopan**

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
**ச. காயத்ரி தேவி**

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
**Ms. Janaki Sadagopan**

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
**பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# இசையும் நடனமும்

# தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து

## *Traditional performing arts of Tamil Nadu street furniture*

**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**சிரேஸ்ட விரிவுரையாளர்,**

**நடன நாடகத்துறை,**

**சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

*Dr. Sharmila Ranjithkumar*

*senior Lecturer,*

*Dance, drama and Theater, arts,*

*Swami Vibulananda Institute of Aesthetic Studies,*

*Eastern University*

**ஆய்வுச் சுருக்கம்**

தெருக்கூத்து என்பது தமிழ்நாட்டின் பாரம்பரியமான நாடக வடிவமாகும். இது பொதுவாக தமிழ் கிராமங்களில் மக்கள் காட்சிகள் அமைத்து நடிக்கும் நடனமும், நாடகமும் சேர்ந்த கலையாகும். தெரு என்பது தெருவைக் குறிக்கிறது. கூத்து என்பது நாடகத்தை உணர்த்தும் சொல். ஆகவே இது தெருவில் நடக்கும் நாடகமாகும். பழந்தமிழரின் மரபில் ஓர் அடையாளமாக இது திகழ்கிறது இதனுடைய சிறப்பானது ஐந்து பிரிவுகளை கொண்டுள்ளது.

சிறந்தவசனம், புராணக்கதைகள். பாவை நிலைகள், இதிகாசங்கள் மற்றும் எளிய மனிதர்களின் வாழ்க்கை நெருக்கடிகள் ஆகியவையாகும். பாடல் மற்றும் இசையில் கூத்துப் பாடல்கள் முக்கியமாக பின்பற்றப்படும். பாரம்பரிய தமிழ் இசையும் கர்நாடக இசையும் இதில் காணப்படும். பண்பாடு மற்றும் மதத்தில் தமிழர் கலாச்சாரம் தெய்வீகம் மற்றும் மத நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தொண்ர்கள் மற்றும் மகா கதைகளில் இராமாயணம், மகாபாரதம், சிவபுராணம் போன்றவை உள்ளடக்கப்படுகின்றது. இவ்வாறாகவே கிராமப்புற மக்களின் மனதில் தெய்வீகத் தன்மையும், சமூகத்தைக் கடந்து எளிமையாக மக்களின் மனதில் பதியக்கூடிய கலையாக இது விளங்குகிறது.

**திறவுச்சொற்கள்**

கூத்து, பாவை நிலம், தெய்வீகம், தொண்டங்கள், மகாகதைகள்

***Study Summary***

*Theru Koothu is a traditional drama form of Tamil Nadu. It is a combination of dance and drama that is usually performed by people in Tamil villages. 'Street' refers to the street. 'Koothu' is a word for drama. So this is a street drama. It is a symbol of the ancient Tamil tradition and its speciality is that it has five sections.*

*Great verse, legends. These are the puppet positions, the epics and the crises of the lives of ordinary people. Koothu songs will be followed mainly in song and music. Classical Tamil music and Carnatic music will be found here. In culture and religion, Tamil culture is based on divine and religious events. Myths and Maha Kathas include Ramayana, Mahabharata and Shiva Purana. This is how it is an art that instills divinity in the minds of rural people and impresses on the minds of the people in a simple way that transcends the social barriers.*

***key Words***

*Koothu, Paavai Nilam, Divinity, Thondangal, Mahakathagal*

**அறிமுகம்**

தமிழ் பண்பாட்டின் முக்கிய அடையாளங்களாக கொள்ளப்படுபவை நாட்டார் நிகழ்த்து கலைகளாகும். இவை பொதுவாக மக்களுடைய வாழ்க்கை அமைவு, வழிபாடு, அவர்கள் வாழ்வில் சந்திக்கின்ற இன்ப துன்ப நிகழ்வுகள் போன்றவற்றின் கூட்டுப் படைப்பாகவே வடிவம் கொள்கின்றன. இவற்றில் சில காலம் காலமாய் தொடர சில காலத்தால் வழக்கொழிந்து போயின. நாட்டார் கலைகள் பொதுவாக பிரதேசத் தன்மை கொண்டதாகவே உள்ளன. பிரதேசத்தின் மரபு வழிபட்ட பண்பாட்டு எல்லைகளையும் பார்வையாளர்களையும் அவை கொண்டுள்ளன. இதில் தமிழ் நாட்டாரின் முதன்மை பெற்ற அரங்க நிகழ்த்து கலையாகக் கருதப்படுவது தெருக்கூத்தாகும். வயல்வெளி, கோவில்வீதி, தெருச்சந்தி போன்றவற்றில் இது ஆடப்பட்ட தன்மையில் தெருக்கூத்து எனும் பெயரினைப் பெறுவதாயிற்று. தமிழகத்து கிராமப்புற மக்கள் தெருக்கூத்தினை நாடகம் என்றே பொதுவாக அழைக்கின்றனர்.

தெருக்கூத்து கிராமப்புற வேளாண் தொழில் செய்வோரது நிகழ்த்து கலையகவே வளர்ந்து வந்துள்ளது. இது ஆடப்பட்டு வருகின்ற காலமும் சூழலும் இதனைப் பிரதிபலிப்பதாக அமையும் தமிழகத்தில் பொதுவாக தைமாதத்தில் அறுவடை முடிவடைந்து விடும். அதன் பின்னர் ஆணியில் உழவுக்காலம் ஆரம்பமாகும். இடைப்பட்ட நான்கு மாத காலம் உழவோரின் ஓய்வு காலமாகும். இக்காலத்திணையே இவர்கள் கூத்தாட்டக் காலமாக கொண்டிருந்தனர். இக்கூத்தானது இரவு முழுவதும் ஆடப்பட்டு வந்த ஒரு கலையாகவே தன்னை நிலைநிறுத்தியிருக்கின்றது.

இயல், இசை, நாடகம் எனப்படுகின்ற முத்தமிழும் ஒருங்கிணைந்த கலை வடிவமான தெருக்கூத்து தமிழகத்தில் தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கல்ப்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் பரவலாகவும் சேலம், தர்மபுரி, அரியலூர் - பெரம்பலூர், சென்னை, தஞ்சை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரிப் பிரதேசம் போன்றவற்றில் சிற்சில இடங்களிலும் தொடர்ந்தும் ஆடப்பட்டு வருவதை இன்று நம்மால் அவதானிக்கமுடிகின்றது.

ஆட்ட முறைகள், ஆடை அணிகலன்கள், ஒப்பனைகள், இசைக்கருவிகள் மற்றும் அரங்கமைப்பு போன்றவற்றில் சற்று வேறுபட்டுக் காணப்படுகின்ற இக்கூத்து வடிவங்கள் வடக்கத்தி நாடகம், தெற்க்கத்தி நாடகம் என்ற இரு வகையினைக் கொண்டிருப்பதனைக்

காணலாம். இவ் வடக்குத் தெற்குப் பாணிகள் பொதுவாக இலங்கையுட்பட்ட தென்னகத்தின் கூத்து வடிவங்களில் இடம்பெறவே செய்கின்றன. கடலூர் மாவட்டத்தில் சிதம்பர மாவட்டம் உள்ளடங்கலாக அதன் தெற்குப் பகுதிகளில் ஆடப்பட்டு வருகின்ற கூத்துகள் தெற்கத்திக் கூத்துகள் எனவும் அதன் வடபகுதி அனைத்தும் ஆடப்படுகின்றவை வடக்கத்திக் கூத்து எனவும் ஆய்வாளர் பேராசிரியர் ஆறுமுகம் இராமநாதன் போன்றவர்கள் கருதுவர்.

பண்றுருட்டியை மையப்படுத்தி வடக்கு தெற்காக இதனைப் பிரித்துப் பார்க்கும் ஆய்வாளர்களும் இருக்கவே செய்கின்றனர். தமிழறிஞரும் ஆய்வாளருமான பேராசிரியர் மூ.ராமசாமி வடக்கத்தி கூத்தான ஆந்திராவிலிருந்து வந்ததெனக் கருதுவார். எனினும் ஆந்திராவில் இன்று ஆடப்படும் வருகின்ற வீதி நாடகங்களை ஆய்வுசெய்த ஆந்திர பல்கலைக்கழகத்தின் நுண்கலை மையத்தினர் அங்கு ஆடப்பட்டு வருகின்ற வீதி நாடகங்கள் தமிழகத்திற்குரிய கலை வடிவம் என்றே வெளிப்படுத்தியிருக்கின்றனர். பொதுவாகப் பார்க்கும் தன்மையில் தமிழகத்தின் தெருக்கூத்து கலைஞர்கள் ஆந்திராவின் எல்லைப் பகுதிகளிலும் ஆந்திராவின் வீதிநாடகக் கலைஞர்கள் தமிழகத்தின் எல்லை பகுதிகளிலும் கூத்துக்களை நிகழ்த்தி வருவதால் தமிழகத் தெருக்கூத்தும் ஆந்திராவின் வீதிநாடகமும் ஒன்றுக்கொன்று கொண்டும் கொடுத்தும் வருவதை இன்று அவதானிக்க முடிகின்றது.

**வரலாற்று பின்னணி**

தமிழகத்தின் வேளாண் தொழில் செய்யும் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து விட்ட தெருக்கூத்து தமிழரின் தொன்மைக் கலையாக கருதப்பட்ட போதும் அதனது பண்டைய வரலாறு குறித்து விரிவாக அறிந்து கொள்ள போதுமான சான்றுகள் இதுவரை நமக்கு கிடைக்காமை பெரும் குறைபாடாகவே தென்படுகின்றது. எனினும் கிபி 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியை இதன் தொடக்க காலமாகக் கொண்டே பொதுவாக ஆய்வுகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் வரலாற்றுக் காலம் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டவர்களில் ஆய்வாளர் நா.முத்துச்சாமி முக்கியமானவராகக் கருதப்படுகின்றார். தெருக்கூத்தில் ஆடப்படும் அனேக கூத்துகள் பாரதக் கதையை மையப்படுத்தியவையாகவே உள்ளன. கிபி 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தே செஞ்சியை ஆண்ட மன்னன் அங்கு மகாபாரதக் கூத்தை ஆடுவதற்கு கால்கோளிட்டவனாக குறிப்பிடப்படுகின்றான். பாஞ்சாலிக்கு கோவில்கள் உள்ள ஊர்களில் முதலில் பாஞ்சாலிக்கு வழிபாடியற்றியே கூத்தை ஆரம்பிப்பர். பாஞ்சாலி கோவில் இல்லாத ஊர்களில் செஞ்சியிலிருந்து மண்ணை எடுத்து வந்து அதனை பூசையில் வைத்து வழிபாடு செய்த பின் கூத்தை ஆரம்பிப்பது அன்றைய நடைமுறையாக இருந்துள்ளது.

தமிழகத்தில் மகாபாரதக் கூத்து ஆடப்பட்ட தொடக்க காலத்தே ஈழக்கிழக்கின் தென்பகுதியில் அமைந்துள்ள பாண்டிருப்பு எனும் இடத்தில் மட்டக்களப்பின் சிற்றரசனாகவிருந்த எதிர்மன்ன சிங்கன் தமிழகத்தின் கொங்கு நாட்டைச் சேர்ந்த தாதன் நாடகக் குழுவினரை கொண்டு மகாபாரதக் கூத்தை முதன் முதலில் தொடர்ந்தாற்போல் பதினெட்டு நாட்கள் ஆடச் செய்ததாகவும் தொடர்ந்தும் அதே காலப்பகுதியில் வருடம் தோறும் அக்கூத்து ஆடப்பட வேண்டுமெனவும் அதன் தலைமை பொறுப்பு தனது பணிக்கர்குடி வழியினருக்கே செல்ல வேண்டும் எனவும் கட்டளை பிறப்பித்து அதற்கான ஒழுங்குகளையும் செய்திருந்தான் எனவும் மட்டக்களப்பு வரலாறு விபரிக்கின்றது. தாதன் கல்வெட்டும் இது குறித்த தகவல்களை வெளிப்படுத்துவதைப் பார்க்கலாம். மேலும் பாண்டவரின் இடம் எனப் பொருள்பட அவ்விடம் பாண்டிருப்பானதாகவும் பின்னர் அங்கு பாஞ்சாலிக்கு கோவிலெழுப்பி அவன் குடிவழி சார்ந்த தலைமையில் வழிபாடியற்றப்பட்டு வருவதாகவும் இன்று மிகப் புகழ்பெற்று விளங்கும்

பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வரலாறு குறிப்பிடுகின்றது. இவ்வாலயத்தின் சடங்கு முறைகளும் தெருக்கூத்து வடிவத்தினை கொண்டிருப்பது அவதானிப்புக்குரியதாகும்.

பாண்டிருப்பை தொடர்ந்து மட்டக்களப்பின் ஏனைய இடங்களில் திரௌபதை அம்மன் கோவில்கள் உருவானதாகவும் சடங்கிலிருந்தே நாடகம் தோற்றம் பெற்றதென்பது பொதுவான கருதுகோளாக அமையினும் மட்டக்களப்பின் திரௌபதை அம்மன் வழிபாடு நாடகத்தில் இருந்தே தோற்றம் பெற்றிருப்பதாகவும் ஆய்வாளர் வெல்லவூர்க் கோபால் தனது மலையாள நாடும் மட்டக்களப்பும் எனும் நூலில் குறிப்பிடுவது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகின்றது. தமிழகத்தின் தெருக்கூத்தும் கர்நாடகாவின் யக்~கானாவும் வங்கத்தின் யாத்ராவும் ஆந்திராவின் வீதிநாடகமும் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பதுவும் ஜப்பானின் கபூகியின் பல்வேறு அம்சங்களிலும் இவை இணைவு பெறுவதுவும் பொதுவாக கண்டு அறியப்பட்டாலும் மேலும் இவை விரிவான ஆய்வினுக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. இவற்றின் அடிப்படையில் தெருக்கூத்தின் வரலாறு இன்னும் பல ஆண்டுகள் முன்னோக்கியதாக அமையும் என்பது பலரின் கருத்தாகவும் உள்ளது.

எனினும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி திராவிட மொழி பேசுகின்ற மக்களது மரபு வழி கலை வடிவங்களில் ஒப்புவமைக் கூறுகளின் வெளிப்பாட்டின் அடிப்படையில் தெருக்கூத்து போன்ற நிகழ்த்து கலைகள் புராதான பொது மூலத்திலிருந்தே கிளைத்தவையாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கே இட்டுச் செல்கின்றன இத்தன்மையில் இதன் தொடக்க வரலாறு முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதே பெரும்பாலான தமிழக ஆய்வாளர்கள் மத்தியில் வலுப்பெற்றுள்ளது

**அரங்கும் நிகழ்த்துகையும் :**

தெருக்கூத்தில் காணப்படும் வடக்கத்தி தெற்கத்தி என்ற இருவகைக் கூத்துக்களில் வடக்கத்திக் கூத்துக்கென தனியாக மேடையெதுவும் அமைக்கப்படுவதில்லை. நாற்சந்தி, கோவில்வீதி, ஊர்வெளி, வயல்வெளி என மக்கள் கூடுகின்ற இடங்களில் கூத்து நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. நாற்சந்தியாயின் ஒரு தெருப் பக்கமாக ஆடுகளம் அமைந்திருக்க ஏனைய மூன்று பக்க தெருக்களிலும் பார்வையாளர்கள் அமைந்திருப்பர். கூத்து விடிய விடிய இடம்பெறும் என்பதால் பார்வையாளர்கள் பாய், படுக்கை விரிப்பு மற்றும் தேநீர் சிற்றுண்டி போன்றவற்றையும் எடுத்து வருவர். ஆடுகளம் களரி என்ற பெயரினைக் கொண்டிருக்கும் களரி பக்கம் பின்புறமாக சாற்று இடைவெளி விட்டு ஒப்பனை அறை அமைந்திருக்கும். இது முன்பக்கம் திறந்ததாக ஏனைய மூன்று பக்கங்களும் அடைக்கப்பட்டிருக்கும். இன்றைய தெற்க்;கத்தி நாடகங்கள் பெரும்பாலும் மேடை அரங்கில் இடம்பெறுவதைப் பார்க்கலாம். பலகைகள் அல்லது வாங்குகளை இணைத்து வேண்டிய அளவில் மேடையை அமைக்கின்றனர். ஓவியங்கள் வரையப்பட்ட திரைச்சீலைகளை மேடையில் தொங்க விடுகின்றனர். நாடகக் குழுவின் பெயர் எழுதிய திரைச்சீலை மேடையின் முன்னால் தொங்கவிடப்படும்

முன்னைய காலங்களில் தீப்பந்தங்களின் வெளிச்சத்திலேயே நாடகங்கள் ஆடப்பட்டன. இன்று மின்விளக்குகளே பயன்படுத்தப்படுகின்றன சில கிராமப்புறங்களில் பெற்றோல்மக்ஸ் பாவனையும் அவதானிக்க முடிகின்றது. தெருக்கூத்தின் வாத்தியக் கருவிகளாக மத்தளம், குழல் கைத்தாளம் போன்றவையே நீண்ட காலமாக இடம்பெற்றிருந்தன. ஆனால் இன்றே இரு கூத்துக்களிலும் ஹார்மோனியம் முக்கிய இசைக் கருவியாக உள்ளதோடு டோலக,; மிருதங்கம், தபேலா மற்றும் கைத்தாளம் ஆகியவையே இசைக்கப்படுகின்றன. வாத்தியக்காரர்கள் இதில்

பிற்பாட்டுக்காரர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அரங்கின் பின்னால் ஒப்பனை கூடப்பக்கமாக அமர்ந்திருப்பர்.

தெருக்கூத்து நிகழ்த்துகின்ற போது மூன்று கட்டங்களை நம்மால் அவதானிக்க முடிகின்றது. மேளக்கட்டு எனப்படும் முதற்கட்டத்தே வாத்தியார் எனப்படும் அண்ணாவியார் தனது பிற்பாட்டுக்காரர்களுடன் வாத்தியக் கருவிகளை இசைத்த வண்ணம் விநாயகர் துதியைப் பாடி கூத்தினைத் தொடங்குவார். சில கூத்துகளில் விநாயகருடன் சிவன், திருமால், முருகன,; சரஸ்வதி மற்றும் குல தெய்வங்களுக்கும் துதி பாடப்படும். பின்னர் கூத்து தொடங்குவதை பார்வையாளருக்கு தெரியப்படுத்தும் வகையில் வாத்தியக்காரர்கள் ஆதிதாளம், அடதாளம், ரூபகதாளம,; திரிபுடைதாளம் மற்றும் ஐம்பை தாளம் ஆகியவற்றை இதன் போது தொடர்ந்து இசைப்பர். மேளக் கட்டினை சில இடங்களில் களை கட்டுதல் எனவும் அழைக்கின்றனர்.

இரண்டாம் கட்டமானது கூத்துக் கலைஞர்கள் அரங்கிற்கு வருதலையும் ஆடுதலையும் குறிக்கும் இவர்கள் மேடையில் தோன்றும் போது இருவர் திரையொன்றினை முன்னால் பிடித்திருப்பர். திரை மறைவில் இருந்தவாறே கலைஞர்கள் தாங்கள் ஆடப்போகும் பாத்திரம் பற்றிப் பாடல் மூலம் வெளிப்படுத்தியதும் திரையை எடுப்பர் பின்னர் ஆடல் இடம்பெறும். இதில் கிரு~;ணர் போன்ற தெய்வீகப் பாத்திரங்கள் திரை மறைவில் நிற்காது நேரடியாகவே மேடையில் தோன்றி ஆடுவர். கூத்தின் மூன்றாம் கட்டம் இறுதிக்கட்ட வசனம், முடிவுப்பாட்டு, மங்களம் பாடுதல் என்பவற்றுடன் நிறைவுறும்.

தெருக்கூத்தில் முதலில் அரங்கில் வெளிப்படும் பாத்திரம் கட்டியக்காரனாகும். இப்பாத்திரம் நிகழ்த்துகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கூத்தினை தொடங்கியும் காட்சிகளை விளக்கியும் சபைக்கு அறிவுரை கூறியும் கலைஞர்களை அறிமுகம் செய்தும் கலைஞர்களுக்கு வேண்டிய ஒத்தாசை புரிந்தும் கூத்து நிறைவுறும் வரை அதில் பம்பரமாக சுழன்று வருபவர் கட்டியக்காரனே. காட்சிகளுக்கு இடையிலும் தாமதங்கள் ஏற்படும்போதும் நகைச்சுவை சம்பவங்கள் மற்றும் கதைகள் போன்றவற்றை கூறி சபையினரை மகிழ்விக்கும் தன்மையும் கட்டியக்காரனைச் சார்ந்ததே.

**ஒப்பனை**

தெருக்கூத்து என்பது ஒரு வழிபாட்டுச் சடங்குமுறை என்பதாகவே பொதுவாக தமிழ்நாட்டு மக்களால் கருதப்பட்டுவருகின்றது. வேடம் புனையும் வேளையில் ஆடை அணிகளுக்கு தீப ஆராதனைகள் காட்டுவதுடன் அவற்றை அணிபவருக்கு தெய்வீகத் தன்மை வருவதாக நம்புவதும் அவர்கள் மனதில் பதிந்தேயுள்ளது. ஒப்பனையானது அதற்கென கட்டப்பட்ட கூடத்திலேயே இடம்பெறுகின்றது. ஒப்பனையில் மிக முக்கியமானது அதற்க்கென உடலில் கட்டப்படும் கட்டுக்களே. முன்னர் முப்பத்தியிரண்டாக இருந்த கட்டுகள் தற்போது குறைவுபட்டு வருவது அவதானிப்புக்குரியதாகின்றது. தலைத்துண்டு, நெற்றிப்பட்டம,; முத்துச்சரம், மீசைக்கட்டு, அட்டிகை, மார்புப்பட்டை, கழுத்து மார்புத்துணிக்கட்டை, புஜக்கட்டு, இடுப்புபட்டை, தலைக்குச்சி, இடுப்புச்சேலை, காற்சலங்கை, முன் கைக்கட்டு, இடுப்புத்துணி, கணுக்கால்க்கட்டு போன்றவையே உடல் கட்டுக்கள் எனப்படுகின்றன.

நிகழ்த்தப்படும் கதைக்கு ஏற்றவாறு கதாபாத்திரங்களின் ஒப்பனை வேறுபடும். முகத்திற்கு அரிதாரம் பூசுவர். காளி, சூரன், அரக்கன் போன்ற பாத்திரங்களுக்கு சிவப்பு, முத்து, வெள்ளை நிறங்கள் பூசுவர். மகாபாரத கதையைக் கொண்ட கூத்துகளில் துரியோதனனுக்கு சிவப்பும், துச்சாதனனுக்கு மஞ்சளும், பீமனுக்கு கறுப்பும் கிரு~;ணருக்கு பச்சையும், அருச்சுனனுக்கு நீலமும், திரௌபதிக்கும் ஏனைய பாத்திரங்களுக்கும் இளம் சிவப்பும் பூசப்படுகின்றது. வலிமை கொண்ட கதாபாத்திரங்கள் கனமற்ற மரத்தால் செய்யப்பட்ட வர்ணம் பூசப்பட்டு கண்ணாடி

இளைகள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிகின்றனர். மரத்தாலான பெரிய முடிகளை இவர்கள் அணிய ஏனையவர்கள் குச்சி முடி மற்றும் கலிகை என்பவற்றை அணிகின்றனர். இன்று தெருக்கூத்துகளில் நவீனமுறையிலான ஒப்பனைகள் இடம்பெற்று வருவது அவதானிப்புக்குரியதாகின்றது.

**முடிவுரை**

நீண்டகால அவதானிப்பில் தெருக்கூத்தானது வன்னியர் (படையாட்சியர்), சமூகத்தினராலேயே வளர்த்து எடுக்கப்பட்டதாக தென்படினும் இன்று பொதுவாக தமிழகத்தின் அனைத்து சமூகத்தினரும் இதில் ஆர்வம் கொண்டிருப்பதனைப் பார்க்கலாம். தெருக்கூத்து வடிவங்களை பலர் எழுதியும் அச்சிட்டுமுள்ளனர். அதில் தேவானம்பட்டினம் ராஜகோபால் படையாட்சி மிக முக்கியத்துவம் பெற்றவர். இவர் இருபதுக்கும் மேற்பட்ட கூத்துக்களை எழுதி அச்சிட்டுள்ளார். நாடக உலகில் புகழ்பெற்ற சங்கரதாஸ் சுவாமிகள் தெருக்கூத்துனை அடியொற்றியை தனது நாடகங்களை உருவாக்கியிருக்கின்றார். அன்னை காலத்தே தெருக்கூத்து பற்றிய விழிப்புணர்வானது அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. வெளிநாட்டவர் உட்பட பலரும் தங்கள் முனைவர் பட்டத்திற்காக தெருக்கூத்துனை ஆராய்ந்திருக்கின்றனர். இன்றைய சூழலில் திரைப்படத் துறையும் சின்னத்திரை வளர்ச்சியும் தெருக்கூத்தின் வளர்ச்சிக்கு சவாலாக அமைந்துவிட்ட போதும் தமிழகக் கிராமப்புற மக்கள் தங்களுடைய மரபு வழிப்பட்ட இவ்வாடற் கலையை நிச்சயம் பாதுகாப்பார்கள் என நம்பலாம்.

**உசாத்துணை நூல்கள்**


01. பழனி. கோ. முத்துகந்தன். சி., தெருக்குத்துக் கலைஞர் களஞ்சியம். போதிவளம் பதிப்பகம் - 2011

02. செல்வறாஜ். ப. முனைவர். சயிட்டு நாடகத்தில் தெருக்குத்துப் பண்பும். மூலரசர் நாடகப்பதிப்பும். திபார்க்கர் பதிப்பகம் - 2008

03. இராமநாதன். ஆ. நாட்டுப்புறக் கலைகள். மெய்யப்பன் தமிழாய்வு மையம். சிதம்பரம்

04. சிவத்தம்பி. கா. பேராசிரியர்.- பண்டைய தழிழ்ச் சமூகத்தில் நாடகம். குமரன் பதிப்பகம் கெழும்பு- 2004

05. இராமசாமி. மு.முனைவர்- தெருக்கூத்து நடிப்பு. தழிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாёர்- 1999

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com